நிதி ஆணைக்குழுவின்
வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2023

செலவினத் தலைப்பு இல. – 011

நிதி ஆணைக்குழு,
இலக்கம்: 03, சரண மாவத்தை, ராஜகிரிய.

உள்ளடக்கம்

உள்ளடக்கம்	பக்க எண்
அத்தியாயம் – 01: நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு	1
அத்தியாயம் – 02: முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	7
அத்தியாயம் – 03: 31 டிசெம்பர் 2023 இல் முடிவுற்ற வருடத்திற்கான மொத்த நிதிச் செயலாற்றுகை.....	20
அத்தியாயம் – 04: செயலாற்றுகை குறிகாட்டிகள்	31
அத்தியாயம் – 05: நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயலாற்றுகை.....	32
அத்தியாயம் – 06: மனித வள விபரம்	36
அத்தியாயம் – 07: இணக்க அறிக்கை.....	39

அத்தியாயம் – 01: நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு

01. அறிமுகம்

பின்னணி

1987 இல் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் பிரகடனப்படுத்தப்பட்ட 13 வது திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளையும், நிதி ஆணைக்குழுவையும் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மாகாண சபைகளின் சேவை விநியோகத்தை சாத்தியப்படுத்தும் வகையில் மாகாணங்களுக்கான வளங்களை இடமாற்றம் செய்யும் செயன்முறைக்கு வசதியளிப்பதற்காக நிதி ஆணைக்குழு நிறுவப்பட்டது. அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டது போல், வளங்களின் தேவைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை வழங்குவதும், நாட்டில் ஒரு சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடைந்து கொள்ளும் நோக்குடன் ஒன்பது மாகாணங்களுக்கும் இடையில் அரசாங்கத்தின் நிதியை பகிர்வது பற்றிய கோட்பாடு, கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களை உருவாக்குவதும் நிதி ஆணைக்குழுவின் பிரதான பொறுப்புக்களாகும்.

நிதி ஆணைக்குழுவின் ஆணை

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் 154 ண பிரிவு நிதி ஆணைக்குழுவை உருவாக்குதல் மற்றும் அதன் தொழிற்பாடுகளுக்கான ஏற்பாடுகளை விபரிக்கின்றது. அரசியலமைப்பின் உறுப்புரை 154 ண (3), (4) மற்றும் (5) பிரிவுகளில் குறிப்பிட்டுள்ளபடி, நிதி ஆணைக்குழுவின் ஆணை பின்வருமாறு குறித்துரைக்கப்பட்டுள்ளன.

உறுப்புரை **154 ண (3)** – அரசாங்கம் ஆணைக்குழுவினது பரிந்துரைகள் மற்றும் கலந்தாலோசனைகளுடன் மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமான நிதியை வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ஒதுக்கீடு செய்யும்.

உறுப்புரை **154 ண (4)** - ஜனாதிபதிக்கு பின்வரும் விடயங்களில் பரிந்துரை செய்வது நிதி ஆணைக்குழுவின் கடமையாகும்

அ) அரசாங்கத்தால் மாகாணங்களின் பயன்பாட்டுக்காக வருடாந்தம் வழங்கப்படும் அத்தகைய நிதிகள் தொடர்பாக பல்வேறு மாகாணங்களுக்கு இடையே அந்த நிதியை பகிர்ந்து கொள்வது தொடர்பான நியமங்கள்

ஆ) ஜனாதிபதியால் மாகாண நிதி தொடர்பாக ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏனைய விடயங்கள்.

உறுப்புரை **154 ண (5)** - நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்குடன் அத்தகைய கொள்கைகளை நிதி ஆணைக்குழு ஒழுங்கமைப்பதுடன் அதற்காக பின்வருவனவற்றை கவனத்தில் கொள்ளும்.

அ) ஒவ்வொரு மாகாணத்தினதும் சனத்தொகை,

ஆ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலா வருமானம்,

இ) சமூக மற்றும் பொருளாதார ஏற்றதாழ்வுகளை குறைத்துக் கொள்வதற்கான முன்னேற்றகரமான தேவைகள் மற்றும்..

ஈ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலா வருமான வேறுபாடுகளை குறைக்கவும், மாகாணங்களிடையே உயர் தலா வருமானத்தை பேணுவதற்குமான முன்னேற்றகரமான தேவைகள்.

அரசியலமைப்புத் தேவைக்கு அமைய நிதி ஆணைக்குழுவால் பரிந்துரைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்றுக் கொண்டு, அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அனுமதி கோரி அவற்றை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கிறார். அதன் பின்னர் அரசியலமைப்பின் உறுப்புரை 154 ண (7) இன் பிரகாரம் கௌரவ ஜனாதிபதி அவர்கள் நிதி ஆணைக்குழுவால் சமர்ப்பிக்கப்படும் பரிந்துரைகளை பாராளுமன்றத்திற்கு முன்வைக்கச் செய்வதோடு, அது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்றத்திற்கு அறிவிக்கவும் வைக்கின்றார்.

2023 ஜனவரி 1ம் திகதி முதல் மே 1ம் திகதி வரையான காலப் பகுதியில் நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு..

i. திரு. சுமித் அபேசிங்க – தலைவர்
ii. கலாநிதி நந்தலால் வீரசிங்க – உறுப்பினர் (பதவிவழி) மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்
iii. திரு.மகிந்த சிறிவர்தன – உறுப்பினர் (பதவிவழி) மற்றும் திறைசேரியின் செயலாளர்
iv. திரு.சின்னத்தம்பி சாமித்தம்பி - உறுப்பினர்
v. திரு.ராசிக் ஸரூக் (ஜ.ச) - உறுப்பினர்

2023 மே 2ம் திகதி முதல் டிசம்பர் 31ம் திகதி வரையான காலப் பகுதியில் நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு..

i. திரு. சுமித் அபேசிங்க – தலைவர்
ii. கலாநிதி நந்தலால் வீரசிங்க – உறுப்பினர் (பதவிவழி) மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்
iii. திரு.மகிந்த சிறிவர்தன – உறுப்பினர் (பதவிவழி) மற்றும் திறைசேரியின் செயலாளர்
iv. திரு.எம்.வாமதேவன் - உறுப்பினர்
v. திரு.ரீ.நளீன் ஒசேன் - உறுப்பினர்

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

நிதி ஆணைக்குழு தனது மூலோபாயத் திட்டத்தை வகுத்துள்ளதுடன், அதனை 2021 முதல் 2024 வரையிலான காலப்பகுதிக்கு புத்துருவாக்கம் செய்துள்ளதுடன் தொலைநோக்கு, பணிக்கூற்று, மற்றும் நோக்கங்கள் என்பவை இணங்காணப்பட்டு மூலோபாய திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

தொலைநோக்கு

சமநிலையான அபிவிருத்தியுடனான சுபீட்சமானதொரு இலங்கை

பணிக்கூற்று

நாட்டில சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக தேவைகளை மதிப்பீட்டாய்வு செய்து மாகாணங்களுக்கு இடையே நிதியை பகிர்ந்து கொள்வதற்கான கொள்கை நியமங்களுடனான பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்

ஆணைக்குழுவின் நோக்கங்கள்

- மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக திறைசேரியில் இருந்து கிடைக்கக்கூடிய போதுமான நிதியை வழங்க பரிந்துரை செய்தல்
- சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு மாகாணங்களுக்கு இடையே நிதி வளங்களை நியாயமான முறையில் பகிர்ந்தளிப்புச் செய்ய பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்
- அரசியலமைப்பின் பிரகாரம் நிதி ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட கட்டளைச் செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

1.3. நிதி ஆணைக்குழுவின் பிரதான தொழிற்பாடுகள்

அரசியலமைப்பின் கட்டளைச் செயற்பாடுகளுக்கு அமைய வருடாந்த பாதீட்டிலிருந்து மாகாணங்களுக்கு போதுமான நிதியினை ஒதுக்கீடு செய்வது தொடர்பாகவும், அத்தகைய நிதி எந்தக் கொள்கையின் அடிப்படையில் ஒன்பது மாகாணங்களுக்கிடையில் நாட்டின் சமமான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்கில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்தல் நிதி ஆணைக்குழுவின் பிரதான தொழிற்பாடாகும்.

இத்தகைய செயல்முறையில் நிதி ஆணைக்குழுவானது

I. வருடாந்தம் மாகாண சபைகளுக்கான வளங்களின் தேவைகளை தயாரித்து, சமர்ப்பிக்க மாகாண சபைகளுக்கு வழிகாட்டல்களை வழங்குதல்,

II. தேசியப் பாதீட்டில் இருந்து மாகாண சபைகளுக்குத் தேவைப்படும் நிதிகளை ஒதுக்கீடு செய்வது தொடர்பிலும், அந்த நிதிகளை மாகாணங்களுக்கு இடையில் பகிர்ந்தளிப்பது தொடர்பிலும் கௌரவ ஜனாதிபதிக்கு பரிந்துரைகளை முன்வைத்தல்,

III. கௌரவ ஜனாதிபதி/ அரசாங்கத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றதும் தேசியப் பாதீட்டின் மூலம் ஒதுக்கப்படும் நிதியை மாகாணத்திற்குள் பல்வேறு துறைகளுக்கு இடையில் பகிந்தளித்தல்,

IV. நிதிப் பயன்பாட்டின் வினைத்திறனையும், விளைதிறனையும் விருத்தி செய்யும் நோக்குடன் மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிப்பது தொடர்பில் வழிகாட்டல்களை வழங்குதல்,

V. சம்பந்தப்பட்ட உரித்தாளர்களுடன் சேர்ந்து மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்து அவற்றை அமுல்படுத்துவதற்கான இணக்கப்பாட்டை வழங்குதல்,

VI. அபிவிருத்திக்கான தலையீடுகளின் போது தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் துறைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை ஊக்குவித்தல் மற்றும்

VII. மாகாண ஆளணி முகாமைத்துவம் தொடர்பில் அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை வழங்குதல்.

1.4 நிறுவனத்தின் பிரதான பிரிவுகள்

1.4 நிறுவனத்தின் பிரதான பிரிவுகள்

ஆணைக்குழுவின் ஆணைகள் மற்றும் நிறுவன செயற்பாடுகளின் படி நிதி ஆணைக்குழு பின்வரும் செயற்பாட்டு மற்றும் துணைச் சேவைப் பிரிவுகளுடன் கட்டமைக்கப்பட்டுள்ளது.

- மாகாண அபிவிருத்தித் திட்டமிடல் பிரிவு
- மீளெழும் தேவைகள் மற்றும் ஆளணி மதிப்பீட்டுப் பிரிவு
- கொள்கை, ஆய்வுகள் மற்றும் அறிக்கையிடல் பிரிவு
- மாகாண வருமானப் பிரிவு
- நிர்வாகப் பிரிவு
- கணக்குகள் பிரிவு
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

நிதி ஆணைக்குழுவில் பிரிவுகளின் தொழிற்பாடுகள்

அ. மாகாண அபிவிருத்தித் திட்டமிடல் பிரிவு

1. நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் உள்ளீர்ப்பதற்காக மாகாண மூலதனத் தேவைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் தேசிய பாதீட்டில் இருந்து ஒதுக்கப்பட்ட நிதிகளை மாகாணங்களுக்குள் பல்வேறு துறைகள் மத்தியில் பங்கீடு செய்தல்
2. மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்
3. மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்து அவற்றை அமுல்படுத்துவதற்கான ஒப்புதல்களை வழங்குதல்

ஆ. மாகாண மீளெழும் தேவைகள் மற்றும் ஆளணி மதிப்பீட்டுப் பிரிவு

1. ஒவ்வொரு மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மாகாண அதிகார சபைகளின் மீளெழும் தேவைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் மாகாணங்களுக்கு இடையில் மானிய நிதியை பகிர்ந்தளித்தல்
2. மாகாணங்களின் தேவைகளின் போது குறைநிரப்புப் பாதீட்டு ஒதுக்கீடுகளை பரிந்துரை செய்தல்

3. மாகாண ஆளணியினரை நிர்ணயிப்பதில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் தேசிய சம்பள ஆணைக்குழுவுடன் தொடர்புகளைப் பேணுதல்

இ. கொள்கை, ஆய்வுகள் மற்றும் அறிக்கையிடல் பிரிவு

1. கௌரவ ஜனாதிபதிக்கு பரிந்துரைகளை முன்வைக்கும் போது ஆணைக்குழுவின் தலைவருக்கும், உறுப்பினர்களுக்கும் உதவி செய்தல்
2. நிதி ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளை தயாரித்து, பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்
3. ஆய்வுகளை மேற்கொண்டு, நிதி ஒதுக்கீடுகளையும், பகிர்ந்தளிப்பு கொள்கைகளையும் அடையாளம் காணுதல்
4. தேவைக்கேற்ப காலாந்தர அறிக்கைகளை தயாரித்தல்

ஈ. மாகாண வருமானப் பிரிவு

1. மாகாண வருமானத்தை மதிப்பீடு செய்து, வருமான இலக்குகளை நிர்ணயித்தல்
2. உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம் பற்றிய ஆய்வுகள்
3. மாகாண வருமானம் பற்றிய தகவல்களை உரித்தாளர்களிடம் சமர்ப்பித்தல்

உ. நிர்வாகப் பிரிவு

1. நிதி ஆணைக்குழுவின் நிர்வாக விடயங்களில் ஈடுபடுதல்
2. விடுமுறை, காப்புறுதி, மேலதிக நேர மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், போக்குவரத்து, தனிப்பட்ட கோப்பு விடயங்கள் மற்றும் சொத்துக்களின் பராமரிப்பு
3. பயிற்சி மற்றும் மனிதவள அபிவிருத்தி


ஊ. கணக்குகள் பிரிவு

1. நிதிக் கூற்றுக்களை அறிக்கையிடுதல் மற்றும் தயாரித்தல்
2. நிதிக் கட்டுப்பாடு மற்றும் தகவல் பராமரிப்பு
3. கொள்முதல் நடவடிக்கைகளை (பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகள்) அமுல்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்

எ. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

1. வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல்
2. நிதி ஆணைக்குழுவினால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு வளங்களை வினைத்திறனாகவும், விளைதிறனாகவும் முகாமை செய்வதற்குரிய உள்ளக கட்டுப்பாட்டு முறையை மதிப்பீடு செய்து, அந்த கட்டுப்பாட்டு முறையின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்.
3. கொள்கைகள், நெறிமுறைகள், சுற்றுநிருபங்கள், ஒழுங்கு விதிகள் என்பன தொடர்பில் ஆணைக்குழு அலுவலகத்தின் தொழிற்பாட்டு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் இணக்கப்பாட்டை மதிப்பீடு செய்தல்.

1.5 நிறுவன விளக்கப்படம்



பி.ப/உ.ப	- பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்	உ.ஆ.உ	- உதவி ஆய்வு உத்தியோகத்தர்
நி.உ	- நிர்வாக உத்தியோகத்தர்	அ.உ	- அபிவிருத்தி உத்தியோகத்தர்
த.தொ.தொ.உ	- தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்	மு.சே.உ	- முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
பு.உ	- புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர்	அ.உ.சே	- அலுவலக ஊழியர் சேவை

1.6 நிதி ஆணைக்குழுவின் கீழ் வரும் நிறுவனங்கள்/நிதியங்கள்

நிதி ஆணைக்குழுவின் கீழ் எந்த நிறுவனங்களும் வருவதில்லை. இது அரசியலமைப்பின் 154 (சு) பிரிவின் கட்டாய செயல்பாடுகளின் பிரகாரம் நிறுவப்பட்ட ஆணைக்குழுக்களில் ஒன்றாகும் (சுயாதீன ஆணைக்குழு)

1.7. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (ஏதும் இருப்பின்),

நிதி ஆணைக்குழுவின் கீழ் வெளிநாட்டு நிதியீட்டளுடனான கருத்திட்டங்கள் ஏதுமில்லை .

அ) கருத்திட்டத்தின் பெயர் :

ஆ) கொடை வழங்கும் முகவர் :

இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – ரூபா மில். :

ஈ) கருத்திட்ட காலம் :

பொருத்தமற்றது

அத்தியாயம் – 02 முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1. முன்னேற்றம்

2023ஆம் ஆண்டுக்குள் நிதி ஆணைக்குழுவானது அரசியலமைப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட கீழ்வரும் பிரதான விடயங்களை அந்த ஆண்டுக்கான செயல் திட்ட கால சட்டகத்திற்கு அமைய நிறைவேற்றியது.

2.1.1 மூலதன பாதீட்டுடன் தொடர்பான விடயங்கள்

i. மாகாண மூலதனத் தேவை மதிப்பீட்டிற்கான வழிகாட்டல்களை வழங்குதல்

நிதி ஆணைக்குழுவானது தமக்கு அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் அதி மேதகு ஜனாதிபதிக்கு பரிந்துரைகளை முன்வைப்பதற்காக வருடாந்தம் மாகாண சபைகளின் நிதித் தேவைகளை மதிப்பீடு செய்கின்றது. இதற்கமைய, 2024 ஆம் ஆண்டிற்கான மூலதனத் தேவை மதிப்பீட்டிற்காக 2023, மார்ச் மாதம் 03ம் திகதி வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு மாகாண சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

ii. 2023 மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்தல்

நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டல்களுக்கு அமைய, நிதி ஆணைக்குழுவின் ஒப்புதலுக்காக வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் ஒன்பது மாகாண சபைகளாலும் முன்வைக்கப்பட்டன. அந்தத் திட்டங்கள் நிதி ஆணைக்குழு அதிகாரிகளால் ஆராயப்பட்டு, ஒன்பது மாகாண சபைகளின் அதிகார சபைகளின் தெளிவுகள் பெறப்பட்டதன் பின்னர், வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களின் நடவடிக்கைப் பட்டியல் பற்றிய சில அவதானிப்புக்களை கருத்திற் கொண்டு 2023ம் ஆண்டுக்கான அந்த அபிவிருத்தித் திட்டங்களின் பரந்த செயற்பாட்டு பகுதிகள் தொடர்பில் கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

iii. 2024ம் ஆண்டிற்காக மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண மூலதனத் தேவைகள் பற்றிய மதிப்பீடு

அடுத்த ஆண்டுக்கான மாகாண சபைகளின் மூலதனத் தேவைகளை மதிப்பீடு செய்வதென்பது ஜனாதிபதிக்கான பரிந்துரையை தயாரிப்பதற்கு ஒரு முன் நிபந்தனையாகும். எனவே நிதி ஆணைக்குழுவால் வழங்கிய வழிகாட்டுதல்களின்படி பெற்றுக்கொள்ளப்பட்ட நிதித் தேவைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டதோடு, மாகாணத் தேவைகள் குறித்து ஒன்றுடன் ஒன்றான இரட்டிப்புத் தன்மையை தவிர்ப்பதற்கு ஏற்ற வகையில் பொதுவான தீர்மானங்கள் எட்டப்பட்டன.

iv. 2024ம் ஆண்டுக்காக மாகாண சபைகளுக்காக ஒதுக்கப்பட்ட மூலதன மானிய நிதிகள் குறித்து அறிவிக்கப்பட்டது.

2024ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் பாராளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்றதைத் தொடர்ந்து, தேசியப் பாதீட்டின் கீழ் 2024ம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட மூலதன மானிய நிதிகள் குறித்து மாகாண சபைகளுக்கு அறிவிக்கப்பட்டது. (மா.நி.அ.மா.நி – 25 பில்லியன் ரூபா, பி.அ.மா.நி 5 பில்லியன் ரூபா மற்றும் வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் 8.8 பில்லியன் ரூபா)

v. 2024 - மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள்

பொருத்தமான படிவங்களுடன் 2024ம் ஆண்டுக்கான மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பதற்கான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு 2023 டிசம்பர் 14ம் திகதி ஒன்பது மாகாண சபைகளுக்கும் அனுப்பப்பட்டது. இந்த வழிகாட்டல்கள் 2024ம் ஆண்டுக்காக மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளை பயன்படுத்தும் பொருட்டு வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பதற்கு உதவும். தேசிய கொள்கை சட்டகம் மற்றும் மாகாண சபைகளின் அபிவிருத்தி முன்னுரிமைகளின் கீழ் மாகாண சபைகளால் தயாரிக்கப்பட்டுள்ள நடுத்தர கால அபிவிருத்தி திட்டங்களுக்கு அமைவாக மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

vi. 2024 பராமரிப்பு செயல் திட்டத்தை தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள்

தேசிய பாதீட்டில் இருந்து மாகாண சபைகளின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக 9 பில்லியன் ரூபா ஒதுக்கீட்டை தனியாக வழங்கும் செயற்பாடு 2022ம் ஆண்டில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் ஒதுக்கீடு 2023ம் ஆண்டிற்காக 15 பில்லியன் ரூபாவாகவும், 2024ம் ஆண்டில் 15 பில்லியன் ரூபாவாகவும் தொடர்ந்து வழங்கப்பட்டது. 2024ம் ஆண்டுக்கான பராமரிப்பு செயல் திட்டத்தை தயாரித்து, அமுல்படுத்துவது பற்றிய வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு மாகாண சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மாகாணங்களின் அபிவிருத்தி மூலம் பொது மக்களுக்கு நேரடி அனுகூலங்களை வழங்கும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக இந்த ஒதுக்கீடு பயன்படுத்தப்படும்.

vii. 2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலை போஷாக்கு உணவு திட்டத்திற்கான வழிகாட்டல்கள்

2023ம் ஆண்டுக்கான பாடசாலை போஷாக்கு உணவுத் திட்டத்திற்காக ஒன்பது மாகாணங்களுக்கும் பாதீட்டில் இருந்து 16.6 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. பாடசாலை போஷாக்கு உணவு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் 2023ம் ஆண்டில் மூன்று கூட்டங்கள் வெற்றிகரமாக இடம்பெற்றன. மாகாண சபைகள், ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், கல்வி மற்றும் சுகாதார அமைச்சுக்கள், தேசிய பாதீட்டுத் திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் பங்கேற்ற இந்த சந்திப்புக்களில் குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்தை வினைத்திறனாகவும், விளைதிறனாகவும் அமுல்படுத்துவது பற்றி கலந்துரையாடப்பட்டதோடு, இந்தத் திட்டம் குறித்து தத்தமது கருத்துக்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. மற்றுமொரு கலந்துரையாடல் உலக உணவு நிகழ்ச்சித் திட்டம், சேவ் த சில்ட்றன், யுனிசெ.ப் ஆகிய நிறுவனங்களின் பங்கேற்புடன் 2023ம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் இடம்பெற்றது. பணம் சாராத உதவியை வழங்கி இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் தாம் காட்டும் ஈடுபாடு குறித்து அந்த நிறுவனங்கள் அங்கு கவனம் செலுத்தின. 16.6 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட 2024ம் ஆண்டுக்கான பாடசாலை போஷாக்கு உணவு நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு 2023 டிசம்பர் 14ம் திகதி மாகாண சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

நிதி ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்டு, உலக உணவுத் திட்டத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்பட்ட அனைத்து உரித்தாளர்களுக்குமான மீளாய்வுக் கூட்டம் மாகாண சபைகள், ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், கல்வி மற்றும் சுகாதார அமைச்சுக்கள், தேசிய பாதீட்டுத் திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம், உலக உணவுத் திட்டம் என்பவற்றின் அதிகாரிகளின் பங்கேற்புடன் 2023 டிசம்பர் 19ம் திகதி இடம்பெற்றது. 2024ம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வினைத்திறனாக அமுல்படுத்தும் வகையில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் இதுவரை

பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவங்கள் அனைத்து மாகாண அதிகாரிகள் மத்தியிலும் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

2.1.2. மாகாண மீளெழும் பாதீடு தொடர்பான விடயங்கள்

மாகாண சபைகளினால் விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கு அமைய மாகாணங்களின் மீளெழும் தேவைகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. 2023ம் ஆண்டில் மாகாண மீளெழும் தேவைகள் மற்றும் ஆளணி மதிப்பீட்டு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

i. 2024ம் ஆண்டுக்கான மீளெழும் பாதீட்டு வழிகாட்டல்களை முன்வைத்தல்

2024ம் ஆண்டுக்கான மீளெழும் தேவைகள் மதிப்பீடு தொடர்பான வழிகாட்டல்களை 2023, ஜனவரி 27 அன்று மாகாண சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் இந்தச் செயன்முறை ஆரம்பிக்கப்படுகின்றது. இந்த வழிகாட்டல்கள் முக்கியமாக மாகாணங்களின் தனிநபருக்கான சம்பளங்கள், ஏனைய மீளெழும் செலவுகள், உள்ளூராட்சி அதிகார சபைகளின் மாற்றல்கள் மற்றும் வருமான மதிப்பீடுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டவையாகும். இதற்கு மேலதிகமாக, மானிய நிதிகளுக்கான கோரிக்கைகளை முன்வைப்பதில், மாகாணங்களால் நிரப்பப்பட வேண்டிய தொடர்புடைய படிவங்களின் தொகுப்பும் அனுப்பப்பட்டது.

ii. 2024ம் ஆண்டிற்கான மாகாண மீளெழும் தேவைகளின் மதிப்பீடு

வழிகாட்டல்களுடன் இணைக்கப்பட்ட நாட்காட்டியின் அடிப்படையில், மாகாணங்கள் தங்கள் தேவைகளை முறையாக பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களில் நிதி ஆணைக்குழுவிற்கு அனுப்பியது. இதன் விளைவாக, 2024ம் ஆண்டிற்கான மாகாண மீளெழும் தேவைகள் மாகாண நிறுவனங்களுடன் கலந்துரையாடி மதிப்பீடு செய்யப்பட்டு, இந்த நோக்கத்திற்காக பிரதம செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் பாதீட்டுப் பணிப்பாளர்கள் உட்பட மாகாண அதிகாரிகளுடன் பல சந்திப்புக்கள் நடைபெற்றன. தேசிய பாதீட்டுத் திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கூட்டங்களில் பங்குபற்றினர்.

மீளெழும் செலவினத் தேவைகளுக்காக நடத்தப்பட்ட வருடாந்த பாதீட்டு கலந்துரையாடல்களின் அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது.

கலந்துரையாடல் நடைபெற்ற தினம்	மாகாணம்
19.06.2023	வட மத்திய
20.06.2023	வடக்கு
21.06.2023	சப்ரகமுவ
22.06.2023	மேல்
23.06.2023	வடமேல்
26.06.2023	ஊவா
27.06.2023	தெற்கு
28.06.2023	கிழக்கு
30.06.2023	மத்திய

iii. மாகாணங்களின் மீளெழும் தேவைகள் குறித்த பரிந்துரைகளைத் பொதுத் திறைசேரிக்கு அறிவித்தல்

மாகாண அதிகாரசபைகளுடன் கலந்துரையாடியதன் பின்னர், 2024ம் ஆண்டுக்கான தேசிய வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக பொதுத் திறைசேரிக்கு அனுப்புவதற்கு முன்னர் மாகாண மீளெழும் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு நிதி ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டது. மாகாண சபைகளுக்கான (வருவாய் மாற்றீடு, எதிர்பாராத நிதி மற்றும் முற்பண பீ கணக்கிற்கான கோரிக்கை உட்பட) திரள் மானிய நிதி 502,679 மில்லியன் ரூபா என 18.08.2023 அன்று திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டது.

iv. 2024ம் ஆண்டிற்காக மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளை அறிவித்தல்

2024ம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் ஒப்புதலுக்கு இணங்க, நிதி ஆணைக்கழு 18.11.2023 அன்று மாகாண மீளெழும் வரவு செலவுத் திட்டத் தொகை பற்றி மாகாண சபைகளுக்கு அறிவித்தது. இதன்படி, 2024ம் ஆண்டுக்காக தேசிய வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட மொத்த மீளெழும் செலவு 429,677 மில்லியன் ரூபாவாகும்.

v. 2023ம் ஆண்டுக்கான குறைநிரப்புப் பரிந்துரைகள்

வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் பின்னர் பிரதானமாக நிரல் அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆளணிச் சேர்ப்பு மற்றும் புதிய ஆட்சேர்ப்புக்கள் காரணமாக ஏற்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகளுக்காக மாகாண சபைகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் பொதுத் திறைசேரிக்கு பரிந்துரைக்கப்பட்டது. பரிந்துரைக்கப்பட்ட தொகைகள் பின்வருமாறு..

(ரூபா.'000)

திகதி	நிரல் அமைச்சின் இணைப்புக்கான குறைநிரப்பு பரிந்துரை	புதிய பரிந்துரை	மொத்தப் பரிந்துரை
21.07.2023		427,539	427,539
07.11.2023	1,508,211	1,224,259	2,732,470
மொத்தம்	**1,508,211**	**1,651,798**	**3,160,009**

vi. 2024ம் ஆண்டிற்கான மாகாண வருமானம் பற்றிய மதிப்பீடு

2023, ஜனவரி 27ம் திகதி நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட மீளெழும் வரவு செலவுத் திட்ட வழிகாட்டலுக்கு அமைய, "E" படிவத்தின் பிரகாரம் மாகாண சபைகள் தமது மதிப்பிடப்பட்ட வருமான இலக்குகளை சமர்ப்பித்தன. அதன் பின்னர் அந்த வருமான இலக்குகள் நிதி ஆணைக்குழுவினால் பகுப்பாய்வு செய்யப்பட்டு, 2024ம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்டது.

2024ம் ஆண்டிற்கான மாகாண மீளெழும் தேவைகளை மதிப்பீடு செய்யும் வகையில் பிரதம செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் பாதீட்டுப் பணிப்பாளர் உட்பட மாகாண அதிகாரிகளுடன் வருடாந்த பாதீட்டுக் கலந்துரையாடல் சந்திப்புக்கள் நடைபெற்றன.

அந்த சந்திப்புக்களில், சம்பந்தப்பட்ட மாகாண அதிகாரிகளின் ஒப்புதலுடன் நிதி ஆணைக்குழுவினால் மாகாண வருமான இலக்குகள் மீளாய்வு செய்யப்பட்டு, இறுதி செய்யப்பட்டது. இணங்கிக் கொள்ளப்பட்ட மாகாண வருமான இலக்குகள் மற்றும் நிதிக் கொள்கைத் திணைக்களத்தினால் கணிப்பீடு செய்யப்பட்ட

அரசாங்க வருமான மாற்றீடுகளின் அடிப்படையில் நிதி ஆணைக்குழு 2024ம் ஆண்டிற்கான மாகாண வருமானத்தை மதிப்பீடு செய்தது.

2.1.3 2022ம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

28.08.2020 அன்று தேதியிடப்பட்ட 02/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைய, 2022ம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக கௌரவப் பிரதமரின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக 2023 மே 19ம் திகதி ஜனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கமைய, பிரதமரின் அனுமதியுடன் இதே அறிக்கை 2023 ஜூன் 16ம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. நிதி ஆணைக்குழுவின் அரசியலமைப்பு ரீதியிலான அதிகாரம், தொழிற்பாடுகள், நிறுவனக் கட்டமைப்பு, தமது பிரதான தொழிற்பாடுகள் சம்பந்தமாக 2022ம் ஆண்டில் நிறுவனத்தின் செயலாற்றுகை, நிதி முன்னேற்றம் மற்றும் இணக்க அறிக்கை என்பன பற்றிய ஆணைக்குழுவின் ஒரு மேலோட்டத்தை இந்த அறிக்கை உள்ளடக்கியிருந்தது. அரச நிதி ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட வடிவத்திற்கு அமைய இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.

2.1.4 கௌரவ ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள் சம்பந்தமான விடயங்கள்

i. 2024ம் ஆண்டிற்காக கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும் நிதி ஆணைக்குழுவின் வருடாந்த பரிந்துரைகளை தயாரித்தல்

அரசியலமைப்பின் 154 ண (4) இன் படி நிதி ஆணைக்குழு தமது வருடாந்த பரிந்துரைகளை தயாரித்தது. தொடரும் வருடத்திற்கான (2024) மாகாண சபைகளின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதித் தேவைப்பாடுகள் சம்பந்தமான பரிந்துரைகளையும், சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை அடைந்துகொள்ளும் நோக்குடன் வருடாந்த பாதீட்டில் இருந்து ஒதுக்கப்படும் நிதியை மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளித்தல் தொடர்பான கொள்கைகளையும் இந்த அறிக்கை உள்ளடக்கியுள்ளது.

அதேவேளை, மாகாண மட்டத்தில் அறிவார்ந்த அடிப்படையிலான ஒதுக்கீட்டையும், நிதிகளின் வினைத்திறனான பயன்பாட்டையும் நோக்காகக் கொண்ட குறிப்பிடத்தக்க கொள்கைப் பரிந்துரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப்பட்ட நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்தி, அதன் பணியாளர்களின் உதவியுடன் ஆணைக்குழுவின் தலைவரால் தயாரிக்கப்பட்டது. 2024ம் ஆண்டிற்காக கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதி ஆணைக்குழுவின் கொள்கைப் பரிந்துரைகள் கீழே விபரிக்கப்படுகின்றன.

பரிந்துரை 1

மாகாண சபைகளுக்கு நிதிப் பற்றாக்குறை பற்றிய விடயத்தை எடுத்துக்காட்டும் ஒரு புதிய அணுகுமுறையாக இந்தக் கொள்கைப் பரிந்துரை முன்மொழியப்பட்டது. இந்த பரிந்துரையில், மாகாண சபைகளுக்கு பகிரப்படும் விடயங்கள் தொடர்பில் நிரல் அமைச்சுக்களுக்கு மேற்கொள்ளும் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடானது மாகாண சபைகளுக்கு பகிரப்படும் அதே விடயத்திற்காக ஒதுக்கப்படும் தொகையை விட மிகவும் அதிகமாகும் என்று நிதி ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. அரசாங்கம் எதிர்கொள்ளும் முன்னெப்போதும் இல்லாத நிதி நெருக்கடிகள் காரணமாக மாகாண சபைகளுக்கு போதியளவில் நிதிகளை ஒதுக்குவதில் அரசாங்கம் சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றது என்ற விடயம் மறைக்கப்பட்டுள்ள நிலையில், பகிரப்படும் விடயங்கள் தொடர்பில் நிரல் அமைச்சுக்களுக்கு கிடைக்கப் பெறும் நிதிகளை

அரசாங்கத்தின் மொத்த வளப் பங்கீட்டில் மேலதிக சுமையை ஏற்படுத்தாமல் மாகாண சபைகளுக்கு மாற்றும் ஒரு நடைமுறைசார் தீர்வை ஆணைக்குழு முன்வைத்தது. இது நிரல் அமைச்சுக்களுக்கு பகிரப்படும் விடயங்கள் தொடர்பில் நிதிகளை ஒதுக்கும் விடயத்தில் கட்டுப்பாட்டைப் பேண திறைசேரிக்கு வசதியளிப்பதோடு, தமது மொத்த மூலதன பாதீட்டிற்குள் மாகாண சபைகளுக்கு மேலதிக வளங்களை ஒதுக்க துணைபுரியும்.

பரிந்துரை 2

நாட்டில் மிகவும் அறிவார்ந்த அடிப்படையில் வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கான வினைத்திறனை விருத்தி செய்யும் நோக்கில் இந்தப் பரிந்துரை ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டது. நிதி ஆணைக்குழு தனது முந்திய பரிந்துரைகளில் மாகாண சபைகளுக்குரிய மூலதன மானிய நிதிகளின் பற்றாக்குறை, பிரதேச வேறுபாடுகளை பிரதிபலிக்கும் வகையில் எந்த ஒழுங்குமுறையும் இன்றி நிரல் அமைச்சுக்களால் பல்வேறு பிரதேசங்களுக்கு வளங்களை ஒதுக்கீடு செய்தல் போன்ற பல காரணங்களால் நாட்டில் மாகாண சபைகளால் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை அடைய முடியாது என்றும், அதேபோல் மாகாண அதிகாரிகளே அபிவிருத்தி நடவடிக்கைகளை திட்டமிட வேண்டும் என்றும் திரும்பத் திரும்ப வலியுறுத்தியுள்ளது.

அதனால், ஒட்டுமொத்த வளப் பங்கீடு மற்றும் செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கும் பொறுப்பை வகிப்பதற்காக இந்தியாவின் முன்னாள் திட்டமிடல் ஆணைக்குழுவிற்கு நிகரான ஒரு பலம்வாய்ந்த அமைப்பு உருவாக்கப்பட்ட வேண்டும் என்று 2023ம் ஆண்டுக்காக முன்மொழிந்த பரிந்துரையில் நிதி ஆணைக்குழு குறிப்பிட்டிருந்தது. அதே பிரேரணை பாராளுமன்ற தேசியப் பேரவையின் ஓர் உப குழுவினால் (குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால தேசியக் கொள்கைகளை வகுப்பதில் முன்னுரிமைகளை அடையாளம் காண்பது பற்றிய உபகுழு) முன்வைக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட பொதுத் துறை ஊழியர்கள், கல்வியலாளர்கள் உட்பட சம்பந்தப்பட்ட தரப்புக்களின் பங்கேற்புடன் நடைபெற்ற பல சந்திப்புக்களில் இந்த விடயம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதன் பின்னர், கருத்திட்டப் பத்திரமும், பரிசீலனை நிபந்தனைகளும் தயாரிக்கப்பட்டன. இதற்கமைய, ஒத்திசைவான துறைசார் கொள்கைகளை வகுப்பதற்கு வசதியளிக்கும் வகையிலும், துரிதமான மற்றும் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை நோக்கி நகர்வதற்கும் ஏற்ற வகையிலும் இந்த செயற்பாடு நாட்டின் நலன் கருதி துரிதப்படுத்தப்பட வேண்டும் என நிதி ஆணைக்குழு வலுவாக பரிந்துரை செய்கின்றது.

பரிந்துரை - 3

நிரல் அமைச்சுக்கள் தமது அபிவிருத்தி நடவடிக்கைகளையும், சேவை வழங்கலையும் அமுல்படுத்துவதற்காக மாகாண கட்டமைப்பை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என முந்திய வருடங்களில் ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரையிலும் முன்மொழியப்பட்டுள்ளது. அமைச்சரவையினால் இரண்டு தடவைகள் அங்கீகரிக்கப்பட்ட இந்த பரிந்துரைக்கு இணங்க நிரல் அமைச்சுக்களும், மத்திய அரசின் ஏனைய முகவரகங்களும் தயக்கம் காட்டிய போதிலும், 2024ம் ஆண்டிற்கான பாதீட்டு அழைப்பில் திறைசேரியும் அதே பரிந்துரையை வலியுறுத்தியுள்ளது.

பல்வேறு கொடை நிறுவனங்களின் நிதியுதவியுடன் முன்வைக்கப்படும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக செயற்திட்ட அலுவலகங்களை தாபிக்கும் விடயத்தில் கட்டுப்பாடு விதிக்கும் அரசாங்கத்தின் சமீபத்திய தீர்மானம் ஒரு சாதகமான நடவடிக்கையாகும் என்று ஆணைக்குழு நம்புகின்றது.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்தினால் ஓர் உறுதியான கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஆணைக்குழு வலுவாக பரிந்துரை செய்கின்றது. இதன் மூலம், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தும் போது மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் அபிவிருத்திப் பணியை முன்னெடுப்பதற்காக நிதி குறைபாடாக உள்ளதால் தற்போது குறைவாக பயன்படுத்தப்படும் மாகாண சபைகளின் ஆற்றல்மிக்க பணியாளர்களை பயன்படுத்துவதற்கான தேவை குறித்து அபிவிருத்திப் பங்காளர்களிடம் எடுத்துரைக்க முடியும்.

பரிந்துரை - 4

பாதீட்டு செயற்பாடுகளுக்காக மாகாண சபைகளை பாராளுமன்றத்திற்கு நேரடியாக பதிலளிக்கும் வகையில் மாற்றியமைப்பதாக இந்த பரிந்துரை அமைந்துள்ளது. வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காக மாகாண சபைகள் விசேட செலவிடும் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட வேண்டும் என்றும், அரசியலமைப்பிலும், 1987ம் ஆண்டு 42ம் இலக்க மாகாண சபை சட்டத்தின் பிரிவு 3 இலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விசேட ஏற்பாடுகளை கவனத்திற் கொண்டு பிரதம செயலாளர்களை பிரதான கணக்கீட்டு அதிகாரிகளாக நியமிக்கும் படியும் நிதி ஆணைக்குழு பல சந்தர்ப்பங்களில் பரிந்துரை செய்துள்ளது. இந்தப் பிரேரணைக்கான அறிவார்ந்த அடிப்படையை கீழ்வருமாறு தெளிவுபடுத்தலாம்.

- அரசியலமைப்பினால் தாபிக்கப்பட்ட மாகாண சபைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து நிறுவனங்களும் வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காக விசேட செலவிடும் முகவரகங்களாக கருதப்படுகின்றன.
- தேவைப்பட்டால் அரசியலமைப்பின் உறுப்புரை 148 இன் கீழ் மாகாண நிதி நிர்வாகத்தை பாராளுமன்றத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவர முடியும்.
- கடந்த 35 வருடங்களில் மாகாண சபை முறையின் பரிணாமத்தில், நிதி முகாமைத்துவம் தொடர்பில் தேவையான முதிர்ச்சியை அவை பெற்றுள்ளன என்பது நிரூபணமாகியுள்ளது (2020ம் ஆண்டில் நிதி முகாமைத்துவம் தொடர்பில் சிறந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தி பாராளுமன்ற பொதுத்துறை கணக்குகள் குழுவிடமிருந்து தங்கப் பதக்கங்களை பெற்ற 15 அரச நிறுவனங்களில் 12 நிறுவனங்கள் மாகாண கட்டமைப்புக்கு உரியவையாகும் என்ற விடயம் அவதானிக்கப்பட்டுள்ளது).
- ஏனைய அனைத்து செலவிடும் பிரிவுகளைப் போலல்லாது மாகாண சபைகளுக்குத் தேவைப்படும் வளங்களை பரிந்துரை செய்வதற்காக ஒரு சுயாதீன முகவரமைப்பை (அதாவது, நிதி ஆணைக்குழு) கொண்டிருப்பதற்கான விசேட ஏற்பாடுகள் அரசியலமைப்பில் காணப்படுகின்றன.
- பிரதம செயலாளரினால் முகாமை செய்யப்படும் பாதீட்டு வழங்கல்களின் அளவு ஒப்பீட்டளவில் பெரிதாகும். அதனால், நிரல் அமைச்சுக்களுக்குரிய செயலாளர்களை நியமிப்பது போலவே மாகாணங்களுக்கான பிரதம செயலாளர்களும் கௌரவ ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுகின்றனர்.
- மாகாண சபைகளுக்கு விடுவிக்கப்படும் நிதி நெறிப்படுத்தப்படலாம் (மாவட்டச் செயலாளர்களை போலல்லாது, மாகாண சபைகள் மீளெடும் செலவினத்திற்கான நிதியை நேரடியாகப் பெற்றுக் கொள்ளாது)

அதனால், உத்தேச பொது நிதி முகாமைத்துவ சட்டத்தினால் அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் விரிவான ஆளுகை சட்டகத்தை எதிர்காலத்தில் அறிமுகப்படும் வகையில் இந்தப் பிரேரனை சாதகமாக கருதப்படுகின்றது என்ற விடயம் மீண்டும் பரிந்துரை செய்யப்படுகின்றது.

பரிந்துரை - 5

மாகாண சபைகளின் மீளெழும் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக தற்போது பயன்படுத்தப்படும் மாகாண வருவாயை மாகாண சபைகளுக்கு மாற்றுமாறு திறைசேரிக்கு முன்மொழியும் வகையில் இந்த பரிந்துரை நிதி ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டது. மீளெழும் மானிய நிதிக்கு (திரள் மானிய நிதி) எதிராக மாகாண வருவாயை ஈடு செய்யும் தற்போதைய நடைமுறையானது மாகாண சபைகளை உருவாக்குவதற்கான அரசியலமைப்பு ஏற்பாடுகளின் உள்நோக்கத்தையோ, வரிகளை விதிப்பதற்காக அதிகாரம் வழங்கும் உள்நோக்கத்தையோ பிரதிபலிப்பதாக இல்லை என ஆணைக்குழு கருதுகின்றது.

அதனால், இந்த நடைமுறையை கைவிடுவதற்காக கடந்த வருடம் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை அமுல்படுத்துமாறும் மூலதன மானிய நிதிக்கு எதிரான வருவாயை ஈடுசெய்யுமாறும், அதன் மூலம் மாகாண வரிகள் சமநிலையான மாகாண அபிவிருத்திக்காக மாற்றப்படும் என்றும் ஆணைக்குழு வலுவாக பரிந்துரை செய்கின்றது.

எனினும், மீளெழும் செலவினம் தொடர்பான இந்த பிரேரணையின் முழுமையான தாக்கத்தை குறைப்பதற்காக 2024ம் ஆண்டில் மூலதன மானிய நிதிக்கு எதிராக 50 சதவீதமான மாகாண வருமானத்தை மாத்திரமே ஈடு செய்ய வேண்டும் என்றும், எஞ்சிய தொகையைக் கொண்டு மீளெழும் செலவினத்தை நிவர்த்தி செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

பரிந்துரை - 6

இந்தப் பரிந்துரையானது கிராமப் புறங்களிலும், பெருந்தோட்டப் பகுதிகளிலும் கல்வி வசதிகளை விருத்தி செய்வதற்காக 50 மாணவர்களையும் விட குறைந்த பாடசாலைகளை மீள் ஒழுங்குபடுத்துவது பற்றி வலியுறுத்துகிறது. நிதி ஆணைக்குழுவினால் திரட்டப்பட்ட தகவல்களுக்கு அமைய, நாடு முழுவதிலும் 50 மாணவர்களையும் விட குறைந்த 1402 பாடசாலைகள் காணப்படுகின்றன. சில பாடசாலைகளில் 10 இற்கும் குறைந்த மாணவர்கள் காணப்படுகின்றனர். பெரும்பாலும் அசௌகரியமான பின்தங்கிய பிரதேசங்களில் மாணவர்கள் எதிர்கொள்ளும் பெறுகை சம்பந்தமான பிரச்சினை இவ்வாறான பாடசாலைகள் இருப்பதற்கு உகந்த காரணமாக இருக்கலாம்.

அவ்வாறான பாடசாலைகளை மீள் ஒழுங்குபடுத்துவதற்கு முன்மொழியும் வகையில் கீழ்வரும் விடயங்கள் ஆணைக்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டது.

- இந்த சிறு பாடசாலைகளுக்கு அருகில் ஒப்பீட்டளவில் பெரும் எண்ணிக்கையான மாணவர்களையும், வசதிகளையும் அல்லது ஆசிரியர்களையும் கொண்ட பாடசாலைகள் இருப்பின் அந்த சிறு பாடசாலைகளின் மாணவர்களை இலகுவாக உள்வாங்க முடியும்.
- மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ள போதிலும், இந்த சிறு பாடசாலைகளில் தரம் 1 முதல் 5 வரை அல்லது 1 முதல் 10 வரை, சில சமயங்களில் உயர்தரம் வரை வகுப்புக்களை பராமரிக்க வேண்டிய நிலை காணப்படுவதோடு, ஒவ்வொரு பாடத்திற்கும் போதியளவு ஆசிரியர்களை நியமிக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாக, சில சமயங்களில் குறிப்பிட்ட பாடசாலைகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை மாணவர்களின் எண்ணிக்கையையும் விட அதிகமாக உள்ளது. இது ஒவ்வொரு மாணவருக்குமான செலவு அதிகரிக்க வழிவகுக்கின்றது.

- இவ்வாறு செலவு அதிகமாக இருந்தும், அயலில் உள்ள ஒப்பீட்டளவில் பெரிய பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது இங்குள்ள மாணவர்களுக்கு இந்தப் பாடசாலைகள் சிறந்த கற்றல் சூழலை வழங்குவதில்லை.
- கிராமப் புறங்களில் உள்ள ஏனைய பாடசாலைகளில் ஆரிசிரியர்களுக்கான கடுமையான பற்றாக்குறை காணப்படும் நிலையில் இவ்வாறான சிறிய பாடசாலைகளில் மேற்குறிப்பிட்ட நிலைமை காணப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.
- அவ்வாறான சிறிய பாடசாலைகளில் பெரும்பாலானவை அயல் பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டால், அந்தப் பாடசாலைகளில் உள்ள பெரும் எண்ணிக்கையான ஆசிரியர்களை ஏனைய கிராமப் புறப் பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களுக்காக விடுவிக்க முடியும்.

கிராமப் புறங்களில் பணியாற்றும் ஆசிரியர்களை மிகச் சிறப்பாக பயன்படுதுவதற்கும், ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் மாணவர்களுக்கு சிறந்த கற்றல் சூழலை வழங்குவதற்கும் இந்தப் பாடசாலைகளை மீள் ஒழுங்குபடுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது என்பதை மேற்குறிப்பிட்ட விடயங்கள் தெளிவாக நியாயப்படுத்துகின்றன. அதனால், அறிவார்ந்த அடிப்படையில் இவ்வாறான பாடசாலைகளை மீள் ஒழுங்குபடுத்துவதற்காக அரசாங்கத்தினால் ஒரு கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்படுகிறது.

பரிந்துரை - 7

இதுவும் கூட மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம் ஈட்டும் சாத்தியப்பாட்டை மேம்படுத்துவதற்காக நிதி ஆணைக்குழுவினால் அடிக்கடி சமர்ப்பிக்கப்பட்ட ஒரு பரிந்துரையாகும்.

13ஆவது திருத்தம் பிரகடனப்படுத்திய சமயம், மாகாண சபைப் பட்டியல் ஊடாக (பகுதி 36.1 முதல் 36.20) மாகாண சபைகளுக்கு பகிரப்படும் வருமான மூலங்கள் ஊடாக தமது மூலதனத் தேவைகளில் ஒரு நியாயமான பங்கை மாகாண சபைகளால் ஈட்டிக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்பட்டது. மாகாண அதிகாரிகளுடன் நிதி ஆணைக்குழு நடத்திய கலந்துரையாடல்களின் அடிப்படையிலும், இது விடயமாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வு முடிவுகளின் படியும் மாகாணங்களில் வருமானம் ஈட்டுவதற்கான முழுமையான சாத்தியப்பாடு மேம்படுத்தப்படவில்லை என்பது மிகவும் தெளிவாகின்றது.

நிதி ஆணைக்குழுவினால் திரட்டப்பட்ட தகவல்களுக்கு அமைய, அரசாங்கத்தினால் ஒட்டுமொத்த சம்பளமும் ஏற்றுக் கொள்ளப்படும் உள்ளூராட்சி நிறுவனங்களைப் பொருத்தவரையில் சாத்தியமிக்க வருமானத்திற்கும் உண்மையான வருமானத்திற்கும் இடையிலான இடைவெளியும் அதிகமாகும். சொத்துக்களின் காலாந்தர மதிப்பீடு கிடைக்கப் பெறாமை, வருமானக் கண்காணிப்பின் குறைபாடு (இதனை நிதி ஆணைக்குழு 2022ல் ஆரம்பித்தது), வரி செலுத்தும் வதிவிடக்காரர்களுக்கு தொந்தரவாக உள்ள நேரம் எடுக்கும் வகையிலான முறைகளின் பயன்பாடு என்பன இந்த நிறுவனங்கள் மூலம் வருமானத்தை திரட்டுவதில் காணப்படும் மந்தமான செயலாற்றுகைக்குரிய பிரதான காரணங்களாகும்.

அதனால், மாகாண மட்டத்திலும், உள்ளூராட்சி மட்டத்திலும் வளங்களை நகர்த்தும் விடயத்தில் காணப்படும் கட்டுப்பாடுகளை சமாளிப்பதற்கு கீழ்வரும் நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும் என முன்மொழியப்படுகிறது.

அ) தமது கட்டுப்பாட்டின் கீழ் வரும் பல்வேறு சட்டங்களின் கீழ் விதிக்கப்படும் கட்டணங்கள், வரிகள் மற்றும் விதிப்பணவுத் தொகையின் அளவை புதுப்பிக்குமாறும், ஆனால் மாகாணப் பட்டியலைப்

பொருத்தளவில் மாகாண சபைகளுக்கு அவை பகிரப்பட வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சுக்களுக்கு அறிவுறுத்துவதற்காக,

ஆ) (அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக) மாகாண சபைகளுக்கு பகிரப்படும் வரிகள் தொடர்பில் பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் அல்லது வரையறைகளை நீக்குவதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கு,

இ) கீழ்வரும் முறைகள் ஊடாக வருமான சேகரிப்பை மேம்படுத்துவதற்காக மாகாண நிர்வாகத்தை ஊக்குவிப்பதற்கு,

- ❖ இந்த அறிக்கையின் அத்தியாயம் 3 இல் பரிந்துரைக்கப்பட்டுள்ள வருமான செயலாற்றுகை மானிய நிதியை அறிமுகப்படுத்தல்
- ❖ மேலே கொள்கைப் பரிந்துரை இலக்கம் 5 இல் முன்மொழியப்பட்டுள்ளவாறு மாகாணத்தில் அபிவிருத்திக்கான செலவினத்தை நிவர்த்தி செய்வதற்காக ஈட்டப்பட்ட வருமானத்தை பயன்படுத்த மாகாண அதிகார சபைகளுக்கு சந்தர்ப்பமளிக்கும் வகையில் மூலதன செலவினத்திற்கு எதிராக மாகாண வருமானத்தில் (50 சதவீதத்தை) ஈடு செய்தல்

ஈ) உள்ளூராட்சி அதிகாரசபைகளை தனது அதிகாரத்தின் கீழ் வைத்திருக்கும் கௌரவ அமைச்சரிடம் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்காக மாற்று மதிப்பீட்டு முறைகளை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுப்பதற்கு

உ) மாகாண சபைகள் அல்லது உள்ளூராட்சி மன்றங்களின் வரி சேகரிப்பு பணியின் வினைத்திறனை விருத்தி செய்வதற்காக தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சேகரிப்பு முறைகளை அறிமுகப்படுத்துவதற்கு வெளிநாட்டு உதவியை பெற்றுக் கொள்வதற்கான சாத்தியப்பாட்டை ஆராயும் படி வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடம் கோரிக்கை விடுப்பதற்காக..

ii. 2024ம் ஆண்டிற்கான பரிந்துரைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

நிதி ஆணைக்குழுவின் 2024ம் ஆண்டிற்கான பரிந்துரைகள் சம்பந்தப்பட்ட அமைச்சரவை பிரேனையை அமுல்படுத்துவதற்கான அனுமதியைக் கோரும் வகையிலும், பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் வகையிலும் 2023 டிசம்பர் 22ம் திகதி கௌரவ ஜனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த பரிந்துரைக்கான அமைச்சரவையின் அனுமதி 2024 ஜனவரி 08ம் திகதி வழங்கப்பட்டது. இதன்படி, 2024 பெப்ரவரி 09ம் திகதி இந்தப் பரிந்துரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2.1.5 காலாண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல்

12/01/2019 அன்று திகதியிடப்பட்ட 01/2019 இலக்க சுற்றுநிரூபத்தின் நிபந்தனைகளுக்கு அமைய, ஒவ்வொரு காலாண்டிலும் கீழ்வரும் தினங்களில் நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

- முதல் காலாண்டு -30.03.2023
- இரண்டாம் காலாண்டு -30.06.2023
- மூன்றாம் காலாண்டு -21.09.2023
- நான்காம் காலாண்டு -27.12.2023

2.2 நிதி ஆணைக்குழுவின் சாதனைகள்

2.2.1 நிதி ஆணைக்குழு வென்ற விருதுகள்

பொதுக் கணக்குகள் மீதான பாராளுமன்றக் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டு 2023 ஜூலை 18ம் திகதி இடம்பெற்ற விருது விழாவில் 2019ம் ஆண்டுக்கான ஒரு பொன் விருதையும், 2020ம் ஆண்டுக்கான ஒரு வெள்ளி விருதையும் நிதி ஆணைக்குழு பெற்றுக் கொண்டது. பொதுக் கணக்குகள் மீதான பாராளுமன்றக் குழுவின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் நிறுவனங்களை பாராட்டுவதற்காக நடத்தப்பட்ட இந்த விழாவில் தொழிற்பாட்டு செயலாற்றுகையிலும், நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி செயற்படும் விடயத்திலும் 2019ம் மற்றும் 2020ம் நிதி ஆண்டுகளில் மிகச் சிறப்பாக செயற்பட்டமைக்காக மேற்குறிப்பிட்ட விருதுகள் வழங்கப்பட்டன.

2.2.2. நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தல்

சமீபத்திய வருடங்களில் கௌரவ ஜனாதிபதிக்கு நிதி ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளில் சிலவற்றை அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன.

I. பகிரப்படும் விடயங்களுக்காக நிரல் அமைச்சுக்களுக்கு கிடைக்கும் வகையில் பாதீட்டின் மூலம் ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டாம் என நிதி ஆணைக்குழு 2022ம் மற்றும் 2023ம் ஆண்டுகளுக்கான வருடாந்த பரிந்துரைகளில் பரிந்துரைத்துள்ளதுடன், ஒரே விடயம் மீண்டும் கவனிக்கப்படுவதை தவிர்ப்பதற்காக அந்த நிதியை முழுமையாக மாகாண சபைகளுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யுமாறும், மூலதனத் தேவைகளுக்காக மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படும் நிதிகளை அதிகரிக்குமாறும் ஆணைக்குழு பரிந்துரை செய்தது. 2024ம் ஆண்டிற்கான பாதீட்டு அழைப்பின் ஊடாக இந்த விடயம் தொடர்பில் திறைசேரியினால் சில முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டுவதில் ஆணைக்குழு மகிழ்ச்சி அடைகின்றது. பாதீட்டு அழைப்பு – 2024 இல் பந்தி 4.1 (iv) இல் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> “ மாகாண சபைகளுக்கு நேரடியாக நியமிக்கப்பட்ட தொழிற்பாடுகளுக்காக நிரல் அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்களின் கீழ் நிதி வழங்கல்கள் சேர்க்கப்படக் கூடாது. மாகாண சபைகளின் நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது செயற்திட்டங்களுடன் பிரதேச மட்டத்தில் நிரல் அமைச்சுக்களால் அல்லது திணைக்களங்களால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது செயற்திட்டங்கள் மீண்டும் முன்னெடுக்கப்படுவதை தவிர்ப்பதற்காக மாகாண சபைகளுடன் இணைந்து திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்”.

II. வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்காக மாகாண சபைகளை விசேட செலவிடும் அலகுகளாக வகைப்படுத்துமாறும், நிதியை விடுவிக்கும் விடயத்தில் ஏற்படும் தேவையற்ற தாமதங்களை தவிர்க்கும் வகையில் பிரதம செயலாளர்களை பாராளுமன்றத்திற்கு நேரடியாக பதிலளிக்க வைக்குமாறும் செலவினங்களை நிவர்த்தி செய்வதற்காக தகுந்த நேரத்தில் நிதி கிடைப்பதை உறுதிப்படுத்துமாறும் ஆணைக்குழு 2021, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் மீண்டும், மீண்டும் பரிந்துரை செய்தது. மாகாண சபைகள் விசேட செலவிடும் அலகுகளாக நியமிக்கப்பட்டதும், சம்பந்தப்பட்ட அமைச்சின் ஊடாக செல்லாமல் மாகாண சபைகளுக்கு நேரடியாக நிதியை விடுவிக்க சந்தர்ப்பம் ஏற்படும். இந்த பரிந்துரையை யதார்த்த பூர்வமாக்கும் வகையில் திறைசேரி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன்படி, தற்போது மீளெழும் மற்றும் மூலதனத்

தேவைகளுக்காக மாகாண சபைகளுக்கு நிதி நேரடியாக மாற்றப்படுகின்றது. இந்த நடைமுறையானது மாகாண சபைகளை பொறுப்புக்கூற வைப்பதோடு, நிதி முகாமைத்துவம் மிகவும் வினைத்திறனாக அமைய வழிவகுக்கும்.

III. அதிகாரப் பகிர்வின் நோக்கத்திற்கு அமைய மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாகாணத்தின் வருமானம் அனுப்பப்பட வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது. இதற்கமைய, தற்போது மீளெழும் மானிய நிதிக்கு எதிராக ஈடுசெய்யப்படும் மூலதன மானிய நிதிக்கு எதிராக மாகாண வருமானத்தை ஈடு செய்யுமாறு ஆணைக்குழு முன்மொழிந்துள்ளது. மூலதன மானிய நிதிக்கு எதிராக மாகாண வருமானத்தை ஈடுசெய்வதானது சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை அடைந்து கொள்ளும் அதிகாரப் பகிர்வின் நோக்கத்தில் நேர்கனிய தாக்கத்தை ஏற்படுத்தும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. இதற்கு பதிலளிக்கும் வகையில், இந்த பரிந்துரையை 2025ம் ஆண்டு முதல் அமுல்படுத்துவதற்கு திறைசேரி நடவடிக்கை எடுக்கும்.

IV. கொடை நிறுவனங்களின் நிதியுதவியுடன் முன்வைக்கப்படும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக செயற்திட்ட அலுவலகங்களை தாபிக்கும் விடயத்தை தவிர்த்துக் கொள்ளமாறும், தேசிய முகவரகங்கள் ஊடாக அபிவிருத்தி நடவடிக்கைகளையும், சேவை வழங்கலையும் அமுல்படுத்தும் விடயத்தில் தற்போதுள்ள மாகாண சபைக் கட்டமைப்பை மிகச் சிறப்பாக பயன்படுத்துமாறும் நிதி ஆணைக்குழுவினால் சமீபத்திய வருடங்களில் அடிக்கடி முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

V. கட்டுப்பாடு விதிக்கும் அரசாங்கத்தின் சமீபத்திய தீர்மானம் ஓர் சாதகமான நடவடிக்கையாகும் என்று ஆணைக்குழு நம்புகின்றது. இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்தினால் ஓர் உறுதியான கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஆணைக்குழு வலுவாக பரிந்துரை செய்கின்றது. இதன் மூலம், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தும் போது மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் அபிவிருத்திப் பணியை முன்னெடுப்பதற்காக நிதி குறைபாடாக உள்ளதால் தற்போது குறைவாக பயன்படுத்தப்படும் மாகாண சபைகளின் ஆற்றல்மிக்க பணியாளர்களை பயன்படுத்துவதற்கான தேவை குறித்து அபிவிருத்திப் பங்காளர்களிடம் எடுத்துரைக்க முடியும். இதற்கு பதிலளித்துள்ள பாதீட்டு அழைப்பு 2024 இல் பிரிவு 4.1 (iv) இல் இரண்டாவது பந்தியில் அதே விடயத்தை வலியுறுத்தியுள்ளது.

“மேலும், மாகாண சபைகளின் கீழ் குறிப்பிடத்தக்க ஆளணியினரை இணைத்துக் கொண்டு ஒரு நிறுவன ரீதியான முறை காணப்படுவதால், முடிந்தளவு மாகாண சபைகளின் அங்கீகாரத்துடன் நிரல் அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்கள் அல்லது நிறுவனங்களின் சேவைகளை வழங்குவதற்காக மாகாண சபைக் கட்டமைப்பு பயன்படுத்தப்பட வேண்டும்”.

2.3 சவால்களும், எதிர்கால கண்ணோட்டமும்

சுதந்திரம் பெற்றதன் பின்னர் எதிர்கொண்ட கடுமையான பொருளாதார நெருக்கடியை அடுத்து, 2023ம் ஆண்டின் நிறைவுப் பகுதியில் இலங்கையின் பொருளாதாரம் ஓரளவு ஸ்திரத்தன்மையை காட்டியுள்ளது. இதன்படி, கடந்த இரண்டு வருடங்களாக எதிர்மறையாகக் காணப்பட்ட நாட்டின் பொருளாதார வளர்ச்சி 2024ம் ஆண்டில் சாதகமான பக்கத்தை நோக்கி நகரும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. எனினும், பல குடும்பங்கள் தொழில்வாய்ப்புக்களை இழந்ததால் கடந்த இரண்டு வருடங்களில் வறுமை நிலையும், சிறுவர்களின் போஷாக்கின்மையும் கடுமையாக அதிகரித்துள்ளது. இந்த நிலைமை எதிர்வரும் வருடத்திலும் தொடரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால், நாட்டில் கொள்கை ரீதியான மற்றும் கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் ஊடாக இந்த சிக்கல்களை தீர்ப்பதற்கான ஓர் அவசரத் தேவை காணப்படுகின்றது.

